செய்தி வெளியீடு எண்.721 நாள்.16.10.2009

செய்தி வெளியிடு – 16.10.2009

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களுக்கு பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த ஓய்வூதியப் பயன்களை வழங்கிட 12 கோடி ரூபாய் அனுமதி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிவந்ததன் காரணமாக இவ்வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கும், பணியில் இருந்தபோது இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம், தொகுப்பு ஓய்வூதியம், முதலிய ஓய்வூதியப் பயன்கள் வழங்குவதில் பல ஆண்டுகளாக இடர்ப்பாடுகள் ஏற்பட்டு வந்தது.

இது தொடர்பாக, 14.7.2009 அன்று தமிழக சட்டப் பேரவையில், தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரிய மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, ஓய்வூதியதாரர்களுக்கு எந்த ஒரு துன்பமும் வரக்கூடாது என்பதால், அவர்களுக்குப் பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கும் ஓய்வூதியப் பயன்களை வழங்கிட 12 கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதியுதவி அளிக்கும் என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, 31.1.1991 முதல் 30.9.2008 வரை ஓய்வுபெற்ற மற்றும் பணியில் இருக்கும்போது உயிரிழந்த பணியாளர்கள் 203 பேருக்கு பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம், தொகுப்பு ஓய்வூதியம் ஆகியவற்றை வழங்குவதற்கும், 31.3.2003 முதல் 31.3.2008 வரையுள்ள காலத்திற்கு 751 பணியாளர்களுக்கு ஐந்தாவது ஊதியக்குழுவின் 60 சதவீத நிலுவைத்தொகையை வட்டியுடன் வழங்குவதற்கும், 333 பணியாளர்களுக்கு ஓய்வூதிய மறுநிர்ணய நிலுவைத்தொகையை வழங்குவதற்கும், 44 ஓய்வூதியதாரர்களுக்கு பொது சேமநலநிதி இறுதித் தொகையை வழங்குவதற்குமாக மொத்தம் 12 கோடி ரூபாயை அரசு மானியமாக அனுமதித்து முதலமைச்சர் கலைஞர் இன்று (16.10.2009) ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.